### கிருதுமால் நதியை வைகை ஆயக்கட்டில் இணைக்க வேண்டும்!

# மானாமதுரையில் அறிவுசார் மையம் அமைக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் ஆ.தமிழரசி வேண்டுகோள்!

சென்னை, ஜன. 13-

**கிருதுமால் நதியை வைகை ஆயக்கட்டில் இணைக்க வேண்டும் எனவும், மானாமதுரையில் அறிவுசார் மையம் அமைக்க வேண்டும் எனவும் சட்டப் பேரவை யில் மானாமதுரை உறுப்பினர் ஆ.தமிழரசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

நிறைய தகவல்கள் படித்துக்கொண்டு வந்திருக்கிறேன். 5 நிமிடம் போதாது. சற்று அதிகம் time கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு அன்பான வணக்கம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திசை நோக்கி, தலை சாய்த்து வணங்குகிறேன். தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் உன்னதமான திட்டங்களை வகுத்து நடை முறைப்படுத்தி, மக்கள் மனதில் தனி இடம் பிடித்துவரும் திராவிட நாயகர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு எனது அன்பான, பணிவான வணக்கங்கள். சர்வதேச அளவில் விளைட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்/வீராங்கனை களைப் பதக்கங்கள் பெற வைத்து, தமிழ்நாட்டின் தலைமகனாக, சகோதர/சகோதரிகளுக்கு மூத்த அண்ணனாக இருந்து, ஓய்வின்றி உழைத்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர், மாநில இளைஞரணி செயலாளர், எங்களின் இளம் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவான, அன்பான வணக்கங்கள்.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற குழுத் தலைவர், அக்கா திருமதி கனிமொழி அவர்களுக்கும் எனது அன்பான வணக்கங்கள். சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது அன்பான வணக்கங்கள். பால்வளத் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்களுக்கு எனது அன்பான வணக்கங்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதி மக்களுக்கும், எனது தொகுதி மக்கள் சார்பாக கழக தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சி தோழர்களுக்கும், எனது குழந்தைச் செல்வங்களுக்கும் அன்பான வணக்கத்தை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ராஜமன்னார் குழு!**

கட்சியைவிட மக்கள் பெரிது, கொள்கையைவிட இந்தியாவின் ஒற்றுமை முக்கியம் என நினைத்துச் செயல்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தலைவர் அவர்கள். பாகிஸ்தான் உடனான 1965, 1971 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில், இந்திய இராணுவத்திற்கு அதிமான நிதியுதவி செய்தவர்கள் தமிழர்கள் மற்றும் நம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள். நமக்கு தேசப்பற்றும் தெரியும், மாநில உரிமையும் தெரியும். அதனால்தான் 1969 ஆம் ஆண்டு ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் உள்ள அதிகாரங்கள் எவை எவை என ஆராய்வதற்கு, நூற்றாண்டு கண்ட நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நீதியரசர் ராஜ மன்னார் அவர்கள் தலைமையில் குழு அமைத்தார்கள். அதிகாரத்தை வரையறுத்து, அதன்விளைவாக மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற முழக்கத்துடன் மாநிலங்கள் இன்றளவும் சுயமரியாதையோடு செயல்பட முடிகிறது. இதற்குப் பிறகுதான் இந்திய அரசாங்கம், ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்குமான அதிகாரத்தை ஆராய்வதற்கு 1983ல் ஒரு குழுவை அமைத்தது. இதை நான் ஏன் இங்கே விவாதிக்கிறேன் என்று சொன்னால், ஒரு மாநிலத்திற்கான உரிய உரிமையையும், அதிகாரத்தையும் கொடுத்தால்தான் அந்த மாநிலம் எந்த அளவிற்கு வளர்ச்சியடையும் என்பதற்கு தமிழ்நாடு ஓர் உதாரணம்.

இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களைவிட தமிழ்நாடு எல்லா திட்டங்க ளிலும் முன்னோடியாகத் திகழ்கிறது என்பதற்கான சான்றினை ஒன்றிய அரசின் தரவுகளிலிருந்து உங்கள் முன்னால் வைக்க இருக்கிறேன். திராவிட நாயகர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு என்பது நமக்காக மட்டுமல்ல, தமிழருக்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கானது. மாநில உரிமையைப் பற்றி புரிதலோடு பேசக்கூடிய ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான். அரசியலமைப்பின் விழுமியங்க ளோடு சட்டத்தைக் காத்து மற்ற மாநிலங்களுக்காகவும் பேசக்கூடிய ஒரே மாநிலம் தமிழ்நாடு. அதனால்தான் அந்தந்த மாநிலங்களில், மாநில முதலமைச்சர்கள் சுதந்திர தினத்தன்று கொடியேற்றுகின்ற உரிமையைப் பெற்றுக் கொடுத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதனால்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் தி.மு.க. உழைப்பு என்பது 100 ஆண்டு காலத்திற்கு மேல் தேவையான ஒரு கட்சி நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். பெண்கள் உழைப்பை அங்கீகரிப்பது, மகளிர் உரிமைத் தொகை, பெண்கள் கல்வியை ஊக்கப்படுத்துவது, பெண் கல்வி ஊக்கத் திட்டம், ஒன்றிய அரசு நமக்கான நிதிப் பகிர்வை வழங்காதபோதும், மாநிலத்தின் வளர்ச்சிக்காக களமாடிக் கொடுப்பவர் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) அண்ணே, please.

**இலக்கை நோக்கிய பயணம்!**

நமது திராவிட நாயகர், நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்ற பொழுது, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் என்பது 5.4 சதவிகிதம் என்பது மாநிலத்தின் பங்கு. ஆனால், இதுவரை இல்லாத வகையில் 9.21 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. நம் முதல்வர் அவர்களின் அடுத்த கட்ட இலக்கு என்னவாக இருக்கும்? அடுத்த 5 ஆண்டுகளில் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு சென்று கொண்டிருக்கிறது.

Reserve Bank of India, 2023-2024 ஆம் ஆண்டு வளர்ச்சி அறிக்கையின்படி இந்தியாவில் அதிகமான வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு தான் என தனது அறிக்கையைத் தந்திருக்கிறது. Reserve Bank of India என்ன சொல்கிறது என்று சொன்னால், ஒரு இலட்சம் நபர்களுக்கு எவ்வளவு தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று தனது சர்வேயில் குறிப்பிடு கிறது. தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரு இலட்சம் நபர்களுக்கு 52 தொழிற்சாலைகள் இருக்கின்றன என்ற சர்வேயினை Reserve Bank of India தந்திருக்கிறது. பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களில் வெறும் 43 தொழிற்சாலைகள் தான் இருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில்தான் 52 தொழிற்சாலைகள் இருந்து கொண்டி ருக்கின்றன. அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிற மாநிலம் நம்முடைய தமிழ்நாடு.

இன்றைக்கு இந்து நாளிதழில், நீங்கள் பார்ப்பீர்களென்று சொன்னால், அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதில் 'தமிழ்நாடு முதலிடம், தமிழக அரசு பெருமிதம்' என்ற ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறது.

வறுமை ஒழிப்பிலும் தமிழ்நாடுதான் முதலிடம். இது நான் சொல்லவில்லை, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கான பாராட்டினை தந்திருக்கிறது. மக்கள் வாழ்வாதாரத்தினை உயர்த்தி மாபெரும் சாதனைகளை நிகழ்த்தி இருக்கிறது தமிழ்நாடு அரசு. 1,666 புதிய நியாய விலைக் கடைகள்; ரூ.100 கோடி மதிப்பீட்டில் 230 நெல் கொள்முதல் நிலையங்கள்; ரூ.359 கோடி மதிப்பீட்டில் மேற்கூரையுடன் நெல் சேமிப்பு தளங்கள் என வறுமை ஒழிப்பில் இந்தியாவிலேயே முதலிடமாக நம்முடைய தமிழ்நாடு திகழ்ந்துகொண்டிருக்கிறது. எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள்கூட ஒன்றிய அமைச்சகத்திற்குச் சென்று விருதினை பெற்று வந்தார்கள்.

எங்களின் இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் தொழில் சார்ந்த திறன்கொண்ட மாணவர்களை உருவாக்கினார்கள். இந்தியாவிலே திறன்மிக்க இளைஞர்க ளின் தலைநகராக (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாட்டை தலைநிமிர்த்தி உள்ளார்கள்.

ஜனநாயகத்திற்கும், பெரும்பான்மைக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஜனநாயகம் என்பது தனி மனித உரிமைகளும், மரபுகளும் மதிக்கப்படுவதாகும்; அங்கு ஜனநாயகம் இருக்கும். தனிமனித மரபுகளும், உரிமைகளும் மறுக்கப்படுகிறபோது பெரும்பான்மை தலை தூக்கும். எங்கு பெரும்பான்மை தலைதூக்குகிறதோ அங்கு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும். ஆகவே, பெரும்பான்மையை நீக்கிவிட்டு, ஜனநாயகத்தை கையிலெடுத்திருப்பவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காகவும், புதிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை என்பதற்காகவும், மும்மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை என்பதற்காகவும், தமிழ்நாடு.

நாங்கள் prepare செய்து வைத்திருக்கிறேன். இரண்டு நிமிடங்கள் உரையாற்ற அனுமதி தாருங்கள்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காகவும், புதிய கல்விக் கொள்கையை ஏற்கவில்லை என்பதற்காகவும், மும்மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை என்பதற்காகவும் தற்போது ஒன்றிய அரசு நமக்கான நிதிப் பகிர்வைத் தரவில்லை. ஆனால், எல்லோருக்குமான அரசாக திராவிட மாடல் அரசை நம்முடைய முதல்வர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய மாண்பையும், ஜனநாயகத்தி னுடைய மாண்பையும் உயர்த்திப் பிடிக்க நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய தொகுதி மக்களின் சார்பாக, மன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் வைத்திருக்கின்ற கோரிக்கையை அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டு, நிறைவு செய்துகொள்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

திருப்புவனம் வட்டத்திற்குட்பட்ட நிலையூர் கம்மிகுடி கால்வாய் விரிவாக்கத் திட்டத்தில் மாங்குளம்-ஆணைக்குளம் கண்மாய்களுக்கு கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கால்வாயிலிருந்து சாரி புதுக்கோட்டை, சூரம்பட்டி, வடுகன்குளம், முக்குடி, செங்குளம் கண்மாய்களுக்கு நேரடி கால்வாய் வெட்டி தர வேண்டும்.

கிருதுமால் நதியை வைகை ஆயக்கட்டில் இணைத்திட வேண்டும். மானாமதுரையில் அரசு கலைக்கல்லூரி அமைத்து தர வேண்டும்.

மானாமதுரைபரமக்குடி, மதுரைஇராமேஸ்வரம் பகுதியான தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டித்தர வேண்டும்.

மானாமதுரையில் அறிவுசார்மையம் அமைக்க வேண்டும். பழமைவாய்ந்த ீ ஆனந்த வல்லியம்மன், சோமநாதர் திருக்கோயில் எதிரே வைகை யாற்றில் படித்துரை ஒன்று ஏற்படுத்தி தர வேண்டும்.

இளையான்குடி பேரூராட்சியை நகராட்சியாக தரமுயர்த்திட வேண்டும்.

இளையான்குடியில் மிளகாய் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்தி தரவேண்டும்.

இளையான்குடி வட்டம் சாலைக்கிராமம் ஊராட்சியை மையமாக வைத்து புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்கி தர வேண்டும்.

திருப்பாச்சேத்தியில் துப்பாக்கி கவுண்டருக்கு திருவுருவ சிலை மற்றும் மணிமண்டபம் ஏற்படுத்தி தர வேண்டும். குலாலர் சமூகத்து மன்னர் சாலிவாகனருக்கு மானாமதுரையில் திருவுருவச்சிலை அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு ஆ.தமிழரசி பேசினார்.



---

### ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டுமென அறிவித்துள்ள

# பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கண்டனம்!

## சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை. ஜன.13-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

புதிய கல்விக் கொள்கையை ஏற்காவிட்டால் பல்கலைக்கழக மானிய குழு அறிவித்துள்ள மானியங்கள் ரத்து, ஏற்காத கல்லூரிகள் வழங்கும் பட்டங்கள் செல்லாது மற்றும் துணைவேந்தர் நியமனத்தில் மாநில அரசின் பிரதிநிதித்துவம் நீக்கம் உள்ளிட்ட அறிவிப்பு குறித்து ஊடகத்தில் வெளியான செய்தி பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், மாணவர்கள் அனைவரையும் கடும் அதிர்ச்சியில் ஏற்படுத்தி உள்ளது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் கல்வித்துறையை தொடர்ந்து சிதைப்பதையே நோக்கமாக கொண்டு தனிக் கவனம் செலுத்தி வருவது இதன் மூலம் வெட்ட வெளிச்சமாக தெரிகிறது.

இந்தியாவிலேயே பள்ளிக் கல்வித்துறையில் இடைநிற்றல் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருவதாக ஒன்றிய அரசு சமீபத்தில் வெளியிட்ட புள்ளி விவரத்தில் இருந்து தெரிய வருகிறது.

உலக அளவில் இளைஞர்களை அதிகம் கொண்டுள்ள இந்திய நாட்டில் குறிப்பாக, தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் முன்னேற்றம் காண மிகவும் இன்றியமையாதது உயர்கல்வியாகும்.

அரசினால் வழங்கப்படும் உயர்கல்வியின் வாயிலாகவே இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தினையும், முன்னேற்றத்தினையும் கொண்டுவர இயலும் என்பதை கருத்தில் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளில் உயர் கல்வித் துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

குறிப்பாக, இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த திறன்களை வழங்கிடும் நான் முதல்வன் திட்டம், மாணவிகள் உயர்கல்வியினை தொய்வின்றித் தொடர மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கிடும் புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கான தொழில் திறன் மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம், முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை திட்டம், மாணவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் உங்களைத் தேடி உயர்கல்வி உள்ளிட்ட பல திட்டங்களால் தமிழகத்தில் உயர்கல்வித் தரத்திலும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும் முன்னணி மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது.

இதையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு திட்டமிட்டே தமிழ்நாட்டின் கல்வியை சிதைக்க வேண்டும் என செயல்பட்டு வருகிறது.

புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்கவில்லை என்ற காரணத்தினால் மாற்றான் தாய் மனப்பான்மையோடு செயல்பட்டு வரும் ஒன்றிய அரசு ஏற்கனவே பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் சமக்கர சிக் ஷா அபியான் திட்டத்திற்கு வழங்க வேண்டிய ரூ.2152 கோடி நிதியை வழங்காமல் பழிவாங்கி வருகிறது.

இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும், அலுவலக பணியாளர்களுக்கும், ஊதியம் வழங்குவதிலும்,பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வதிலும்,மாணவர் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்துவதிலும் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய அரசை எதிர்த்து நாங்கள் போராட்டம் நடத்திய தன் விளைவாக ஒன்றிய அரசு நிதி ஒரு பைசா கூட வழங்காத சூழ்நிலையிலும், மாநில அரசு தன்னுடைய நிதியிலிருந்து சர்வ சிக் ஷா அபியான் திட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்களுக்கும் ஊதிய ஊதியத்தை வழங்கி வருகிறது. அதாவது புதிய கல்விக் கொள்கையை ஏற்று பி.எம் ஸ்ரீ ஸ்கூல் திட்டத்தில் கையெழுத்திட்டால் தான் நிதியை ஒதுக்குவேன் என்று பிடிவாதம் பிடித்து வரும் ஒன்றிய அரசு ஏழை,எளிய மாணவர்களின் கல்வியில் தொடர்ந்து விளையாடி வருகிறது.

பள்ளிக்கல்வித்துறையை மிரட்டி நிதியை வழங்காமல் சிதைத்து வரும் ஒன்றிய அரசு அதற்கு ஒரு படி மேலாக தற்போது உயர்கல்வித் துறையையும் சிதைக்கும் வண்ணம் அதனுடைய கைப்பாவையாக உள்ள பல்கலைக்கழக மானிய குழுவை பயன்படுத்தி மிரட்டி வருகிறது. புதிய கல்விக் ணகொள்கையை ஏற்காத பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் செல்லாது என்றும், மானியங்கள் வழங்கப்படாது என்றும், துணைவேந்தர் நியமனத்தில் மாநில அரசின் பிரதிநிதித்துவம் நீக்கம் என்ற அறிவிப்பு குறித்து ஊடகங்களில் வெளியான செய்தி மூலம் தெரிய வந்துள்ளது.கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக இது போன்ற சர்வாதிகார ஆணையை ஒன்றிய அரசு வெளியிட்டதற்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

இதன் காரணத்தினால்தான் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறது. சர்வதிகாரப் போக்கோடு

பல்கலைக்கழக மானிய குழு வெளியிட்டுள்ள அறிக்கையை உடனடியாக திரும்ப பெற வேண்டும் எனவும், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்ற தைரியமாக எதிர்த்தோடு, மட்டுமல்லாமல் மாநிலத்திற்கு என்றே மாநில கல்விக் கொள்கையை உருவாக்க உயர்மட்ட குழுவை திமுக அரசு கடந்த 2022ஆம் ஆண்டு அமைத்தது. இதன் அடிப்படையில் மாநிலக் கல்விக் கொள்கையைத் தயார் செய்ய டெல்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையிலான 12 நபர்களை உள்ளடக்கிய உயர்மட்ட குழு அமைக்கப் பட்டது.

மாநில அரசின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு மாநிலக் கல்விக் கொள்கை தயார் செய்யும் பணியை மேற்கொண்ட இந்த குழு, மாநிலக் கல்விக் கொள்கையை தயார் செய்து இறுதி அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த சூழலில் இது புதிய கல்விக் கொள்கையை திணிப்பது என்பது தமிழ்நாட்டில் என்றென்றும் எடுபடாது.

கூட்டாட்சி தத்துவத்தில் இயங்கும் ஒன்றிய அரசு இது போன்ற சர்வதிகார ஆணைகளை எல்லாம் ரத்து செய்து விட்டு ஏற்கனவே நிலுவையில் உள்ள தொகையை விரைந்து வழங்க வேண்டும் எனவும்.அவ்வாறு வழங்கவில்லை என்றால் ஒன்றுபட்ட பேராசிரியர்கள், ஆசிரியர் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் ஆகியோரை ஒன்று திரட்டி தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக மிகப்பெரிய போராட்டத்தை ஒன்றிய அரசுக்கு எதிராக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் முன்னெடுக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



---

### ராமலிங்கம் தொடர்புடைய 28 இடங்களில்

### வருமான வரித்துறையினர் சோதனை

# எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ரூ.700 கோடி வரி ஏய்ப்பு!

## கணக்கில் வராத ரூ.10 கோடி பறிமுதல்!

ஈரோடு, ஜன. 13 -

எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ராமலிங்கம் தொடர்புடைய இடங்களில் நடந்த சோதனையில் 700 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது. ஈரோடு மாவட்டம் செட்டிபாளையத்தை தலைமையிடமாக கொண்டு, என்.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன் பிரவேட் லிமிடெட் என்ற பெயரில் தனியார் கட்டுமான நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் என்.ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமானது. இவர் எடப்பாடி பழனிசாமியின் நெருங்கிய உறவினராவார்.

இந்நிறுவனத்திற்கு சென்னை உட்பட மாநில முழுவதும் மற்றும் கர்நாடகா மாநிலம் பெங்களூரு என வெளிமாநிலங்களிலும் கிளை அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் கடந்த 2022-23 மற்றும் 2023-24ம் நிதியாண்டில் தனது வருமானத்தை பெரிய அளவில் குறைத்து கணக்கு காட்டியதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த நிறுவனம் கட்டுமான பணிகள் மூலம் பல கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

இதையடுத்து 50க்கும் மேற்பட்ட வருமான வரித்துறை அதிகாரிகள் செட்டிபாளையத்தில் உள்ள என்.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் தலைமை அலுவலகம், சென்னை, பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் உள்ள அதன் கிளை நிறுவனங்கள், ராமலிங்கம் மற்றும் அவரது மகன்களின் வீடுகள் என 28 இடங்களில் சோதனை நடத்தினர். 5 நாட்கள் நடைபெற்ற இந்த சோதனைகளில் கணக்கில் வராத 10 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது. மேலும், இந்த சோதனைகளில் 700 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வருமான வரித்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---



சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு ஏற்பாட்டில் ஆயிரம் விளக்கு கிழக்கு, மேற்கு , அண்ணாநகர் தெற்கு ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், 2, BLC, ஆகிய 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பகுதி செயலாளர்கள் ந. ராமலிங்கம், மா.பா. அன்பு துரை,வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.என்.. துரை, வி எஸ் கலை, ஏ.சங்கீதா, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.எஸ். ராஜ், பொதுக்குழு உறுப்பினர் நற்குணநாதன், வெற்றிச் செல்வி மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், பாக முகவர்கள், பாகத் தலைவர்கள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு நல உதவிகளைப் பெற்றார்.

---

### ரெ.தங்கம் தலைமையில் - தமிழ்நாடு

# மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பில் பொங்கல் விழா! நல உதவிகள்!

## ஆர்.எஸ்.பாரதி - அன்பகம் கலை- பூச்சி முருகன்-நா.எழிலன் பங்கேற்பு.

சென்னை ஜன.13,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நல்லாசியுடனும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல் வாழ்த்துக்களுடன் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக அதன் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் தலைமையில் இன்று (13.1.2025 திங்கட்கிழமை) மாலை 4 மணியளவில் அண்ணா அறிவாலயம் வளாகத்தில் தைப் பொங்கல் மற்றும் தமிழ் புத்தாண்டு திருநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இவ்விழாவில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும்,கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் எஸ்.பாரதி, கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை,தலைமை நிலைய செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன்,ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன் ஆகியோர் பங்கேற்று 500க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு கரும்பு,புத்தாடைகள் வழங்கி வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் தலைமைக் கழக நிர்வாகிகளும், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா. அன்பு துரை,மற்றும் கழக நிர்வாகிகளும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில,மாவட்ட நிர்வாகி களும், ஏராளமான மாற்றுத்திறனாளிகளும் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சி இறுதியில் சங்க மாநில பொதுச் செயலாளர் பா.சந்தான கிருஷ்ணன், பொருளாளர் க. இளங்கோவன், சென்னை மாவட்ட நிர்வாகிகள் வழக்கறிஞர் எஸ். கிருஷ்ணகுமார், பா.சக்திவே ல்,கி பத்மநாபன்,மு. மணி, ஆர். சீனிவாசன், கே.சைமன், எம்.பெருமாள், தர்மலிங்கம், ஹரி கணேஷ்,மோகன்ராஜ், பெரியசாமி,ஹ. சரஸ்வதி, அமுத வல்லி சார்லஸ்,க.பாத்திமா ஆகியோர் நன்றி தெரிவித்து பேசுகின்றனர்.

---

### தமிழறிஞர் – பேராசிரியர்

# சாலமன் பாப்பையா துணைவியார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.13-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்களின் துணைவியார் அவர்களின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

தமிழறிஞரும் பிரபல பேச்சாளருமான பேராசிரியர் திரு. சாலமன் பாப்பையா அவர்களின் துணைவியார் திருமதி. ஜெயபாய் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

உற்ற துணையான வாழ்விணையரை இழந்து தவிக்கும் திரு. சாலமன் பாப்பையா அவர்களுக்கு எனது ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை**

**சனவரி 13 (2005)**



கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

“சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு.” என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**